# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

*India's National Spiritual Newspaper*

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAANS

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Tamil | ₹ 10/-

Vol. XXVI | YEAR OF OUR LORD JESUS CHRIST, MARCH 2021 | No. 4


PRAISE THE LORD!!

## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

**சங்கீதம் 45:1-10**

1. என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது; நான் ராஜாவைக் குறித்துப் பாடின கவியைச் சொல்லுகிறேன்; என் நாவு விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத்தாணி.

2. எல்லா மனுபுத்திரரிலும் நீர் மகா சவுந்தரியமுள்ளவர்; உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது; ஆகையால் தேவன் உம்மை என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கிறார்.

3. சவுரியவானே, உமது மகிமையும் உமது மகத்துவமுமாகிய உம்முடைய பட்டயத்தை நீர் உம்முடைய அரையிலே கட்டிக்கொண்டு,

4. சத்தியத்தினிமித்தமும், நீதியுடன் கூடிய சாந்தத்தினிமித்தமும், உமது மகத்துவத்திலே ஜெயமாக ஏறிவாரும்; உமது வலதுகரம் பயங்கரமானவைகளை உமக்கு விளங்கப்பண்ணும்.

5. உம்முடைய அம்புகள் கூர்மையானவைகள், அவைகள் ராஜாவுடைய சத்துருக்களின் இருதயத்திற்குள் பாயும்; ஜனசதளங்கள் உமக்குக் கீழே விழுவார்கள்.

6. தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.

7. நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர்; ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப்பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்.

8. தந்தத்தினால் செய்த அரமனைகளிலிருந்து புறப்படுகையில், நீர் மகிழும்படி உமது வஸ்திரங்களெல்லாம் வெள்ளைப்போளம் சந்தனம் லவங்கம் இவைகளின் வாசனை பொருந்தியதாயிருக்கிறது.

9. உமது நாயகிகளுக்குள்ளே அரசரின் குமாரத்திகளுண்டு, ராஜஸ்திரீ ஓப்பீரின் தங்கம் அணிந்தவளாய் உமது வலதுபாரிசத்தில் நிற்கிறாள்.

10. குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்துச் சிந்தித்துக்கொள்; உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு.

# "மனந்திரும்புங்கள்!"

**பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது !!**

**அது முதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்** (மத்தேயு 4:17).

மனந்திரும்புதல் என்னவாயிற்று? இன்றைய சபைகளில் இந்த வார்த்தையை நாம் கேட்பதில்லை. தங்களுடைய பாவங்களுக்காகத் துக்கிக்கும்படி இந்நாட்களில் போதகர்கள் தங்கள் சபையாருக்குக் கூறுவதில்லை; தங்களுடைய துன்மார்க்கத்தினால் இயேசுவைக் காயப்படுத்தியதிற்காகப் புலம்பும்படி சபையாருக்கு அறிவுறுத்துவதில்லை.

இன்று நாம் கேட்கும் செய்தி: "விசுவாசியுங்கள்! இயேசுவை ஏற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்". இச்செய்திக்கு ஆதாரமாக அப்போஸ்தலர் 16:30-31 உபயோகிக்கப்படுகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் சிறைச்சாலையில் இருக்கும்போது, திடீரென்று பூமி அதிர்ந்து சிறைச்சாலையின் கதவுகள் திறவுண்டன என்று இந்தப் பகுதியில் வாசிக்கலாம். எல்லாக் கைதிகளும் அந்தக் குழப்பத்தில் தப்பித்து விட்டனர் என்று சிறைச்சாலைக்காரன் எண்ணினான். அவர்கள் அவ்வாறு தப்பிவிட்டால் தனக்கு மரண தண்டனை கொடுக்கப்படும் என்று பயந்தான். எனவே தனது பட்டயத்தால் தன்னையே கொல்ல அவன் முயன்றபோது, பவுலும் சீலாவும் அவனைத் தடுத்து, யாரும் தப்பிக்கவில்லை என்று கூறி அவனைத் தைரியப்படுத்தினார்கள்.

அப்பொழுது அவன் அப்போஸ்தலர்கள் முன்பு விழுந்து, ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்றான். அதற்கு அவர்கள்: "**கர்த்தராகிய** இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (அப்போஸ்தலர் 16:30-31) என்றார்கள்.

அந்த நேரத்தில் அச்சிறைச்சாலைக்காரன் தற்கொலை செய்யும் தருவாயிலிருந்ததை நாம் கவனிக்க வேண்டும். அவன் ஏற்கனவே மனந்திரும்புவதற்குத் தயாராக, முழங்காற்படியிட்டு, அப்போஸ்தலர்கள் முன்பு நடுக்கத்துடன் காணப்பட்டான். எனவே, உண்மையான விசுவாசத்துடன் இயேசுவை ஏற்றுக் கொள்ள அவனது இருதயம் தயாராக இருந்தது.

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



**நமது செயல் திட்டம்**

பூர்வகால மற்றும் ஆதி அப்போஸ்தல உபதேசங்களை அவற்றின் சாரம் சற்றேனும் குன்றாமல் இப்புதிய தலைமுறையினருக்கு எடுத்து இயம்ப வேண்டும்! இதுவே இன்றையத் தேவை !!


CHIEF EDITORS

Pastor S. Sam Selva Raj

Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

MANAGING EDITOR

Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

ADMINISTRATION

Bro. N. Prakasam, M.A., General Manger

EDITORIAL BOARD

Sis. Jesy Veena Sam

Bro. M. Paul Raj, M.A., B.Ed.

Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.

HEAD OFFICE CO-ORDINATORS

Bro. John Rodrigues

Sis. E. Daisy Rani

ADVISORY BOARD

Adv. Jose Abraham

Adv. N. Balaji, B.Com., B.L.

Dr. S. Rabinder Boaz, M.S.

Er. C.G.S. Babu Rao, B.Tech., M.Tech (DM)

Aud. K. Puratchivendan, M.Com., B.L.



PUBLISHER & PRINTER

Pastor S. SAM SELVA RAJ

Echo of His Call Printers

10, Mohammed Abdullah 2nd Street,

Chepauk, Chennai- 600 005, India.

Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766

Cell : (+91) 98410 71852, 95661 31858

E-mail : sam@echoofhiscall.org

biblecor@yahoo.co.in

Websites :

www.echoofhiscall.org

www.echoofhiscall.com


### "பயப்படாதே, நான் உன்னோடே இருக்கிறேன்;" (ஏசாயா 43:5)

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர, சகோதரிகளே,

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்புடன் உங்களை வாழ்த்துகிறோம்.

ஒன்றும் நிச்சயமில்லாத இந்த நாட்களில், நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பாதுகாப்பிற்குள் மகிழ்ச்சியாய் இருப்பீர்கள் என்று நம்புகிறோம்.

COVID-19 என்ற கொள்ளை நோயின் பாதிப்பு வரத் தொடங்கியதும் உலகம் முழுவதிலுமுள்ள அமைப்புகள் சரிவைக் காணத்தொடங்கியுள்ளன. பொது மக்களின் ஆவிக்குரிய நிலையும் அதிகமாய் பாதிக்கப்பட்டுள்ளது. இன்று இந்த கொள்ளைநோய் பலரது வாழ்க்கையைப் பாதித்துள்ளதால், உலக முழுவதுமுள்ள எல்லா அமைப்புகளையும் ஒரு வல்லமை ஆளுகை செய்கிறது என்று மக்கள் உணரத் தொடங்கிவிட்டனர்.

இயேசு கிறிஸ்துவே மெய்யான தேவன் என்று இந்த உலக மக்கள் அனைவரும் அறியும்படிக்கு அவரது பிள்ளைகளாகிய நாம் ஜெபிக்க இதுவே சரியான தருணம். இவ்வுலக நாடுகளில் வாழும் எல்லா மக்களின் வாழ்விலும் இயேசுவின் சுவிசேஷம் உண்மையாய் உணரப்பட வேண்டும் என்பதே நமது வாஞ்சையும் ஜெபமுமாக இருக்க வேண்டும். உலகிலுள்ள அனைத்து சபைகளும் முழு சுவிசேஷத்தையும் முழு உலகுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். "இப்படி எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம் வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன்," என்று பவுல் ரோமர்15:19ல் குறிப்பிடுகிறார். 2 கொரிந்தியர் 7:1ல் **"இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்"**, என்றும் எழுதுகிறார்.

இத்தகைய நோக்கத்தோடு நமது ஊழியங்கள், பரிசுத்தமாகுதலை பூரணப்படுத்துவதாக உள்ளது. முழுமையான சுவிசேஷம் என்பது செத்தகிரியைகளிலிருந்து மனந்திரும்புதல், தேவனிடத்தில் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசங்கள், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய ஆக்கினைத்தீர்ப்பு போன்றவற்றை அடக்கினது. **"ஆகையால். கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன்பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோமாக"** என்று பவுல் (எபிரெயர் 6:1,2) குறிப்பிடுகிறார்.

ஜீவனுள்ள தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரையும், அவர் அருளும் இரட்சிப்பையும் அறியாத கோடிக்கணக்கான மக்களுக்காக நாங்கள் பாரப்படுகிறோம். முழு உலக மக்களுக்கு வரப்போகும் நியாயத் தீர்ப்பு, மற்றும் இந்த முழு உலகிலும் இயேசு கிறிஸ்து இல்லாத மக்கள் வாழ்க்கையின் பின்விளைவுகள், ஆகியவற்றைக் குறித்த பயங்கரமான காரியங்களுக்காக கர்த்தராகிய தேவன் எங்களை அதிகமாய்ப் பாரப்படுத்துகிறார். இவற்றை மனதில் வைத்துக் கொண்டு நித்தியத்திற்கேற்ற பணிகளில் கடினமாய் உழைத்து வருகிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகள் என்று அழைக்கப்படும் மக்கள் அழிந்து போகும் இவ்வுலக மக்களின் நித்திய வாழ்வைக்


Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) BIBLECOR - Postal Courses (3 languages) Theological Correspondence Courses (2 languages) Church Planting Nehemiah Bible Colleges Gospel Printing Press Great Commission Partners St. Paul's Matriculation School Crusades Community Development

குறித்த எந்த கரிசனையு மில்லாமல் காணப்படுகிறார்கள். உலகத்தின மீது வரவிருக்கும் நியாயத்தீர்ப்பினிமித்தம், உலக வல்லமைகளின் தாக்கம் எங்கள்மேல் வந்தாலும், சுவிசேஷம் எல்லா உலக மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்று பிரயாசப்படுகிறோம். எங்கள் மாநில ஒருங்கிணைப்பாளர்கள், துணை ஆசிரியர்கள், ஏனைய ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்காக அவரவர் செய்யும் கிரியைகளை கூடுதல் உத்தரவாதத்துடன் செய்ய உற்சாகப்படுத்துகிறோம்.

இத்தகைய சூழ்நிலையில், **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களைப் போன்ற உண்மையான ஊழியங்களைத் தாங்க அழைக்கப்பட்டவர்களில் சிலர் தங்கள் உத்தரவாதத்திலிருந்து விலகி, பின்வாங்கத் தொடங்கியுள்ளனர். இதனால் பொருளாதார நெருக்கடிகள் ஒரு பக்கமும், சுவிசேஷப் பணிகளில் ஏற்படும் பிரச்சினைகள் மறு பக்கமுமாய் எங்களை நெருக்கி வருகின்றன. எல்லாவற்றையும் விளக்கமாய் இங்கே குறிப்பிட முடியாது.

எனவே, எங்கள் அன்பு நண்பர்களே, இந்தக் கடினமான காலகட்டத்தில் எங்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் ஜெபங்களும் உதவிக்கரங்களும் எங்களுக்கு மிகவும் தேவையாயிருக்கிறது.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,
**பாஸ்டர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன்.**

## URGENT

We need a **Hindi knowing Theologian** to handle the post of **Warden** in our **Nehemiah Bible College** at Chennai. Salary, Boarding & Lodging will be provided. Please Contact:

**Pr. S. Sam Selva Raj,**
Cell : 98412 71858 / 98410 71858
E.mail : sam@echoofhiscall.org

.... 1-ம் பக்கத் தொடர்ச்சி

மாற்கு 16:16 ல் இயேசு தம் சீஷர்களிடம் கூறுவதை வாசிக்கலாம்.

இருப்பினும், முன்னதாக, "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று இயேசு குறிப்பிட்டிருக்கிறார். அப்படி யானால், மக்கள் அவரை விசுவாசிக்கும் முன்பாக சுவிசேஷம் அவர்களுக்குப் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்பதுதான் உட்கருத்து.

இயேசு குறிப்பிடும் சுவிசேஷம் என்ன? அது பிரசங்கித்த சுவிசேஷமே - மனந்திரும்புதலின் சுவிசேஷம்!

வனாந்தரத்திலே இயேசு சோதிக்கப்பட்டபின், இயேசு பிரசங்கித்த முதல் செய்தி என்ன என்று ஆலோசிப்போம் - "அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்" (மத்தேயு 4:17).

விசுவாசிப்பதற்கு முன்பு மக்கள் மனந்திரும்பும்படியாகவே இயேசு அழைப்பு கொடுத்தார்! "...இயேசு கலிலேயாவிலே வந்து, தம்முடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து; காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்" (மாற்கு 1:14-15) என்று மாற்கு எழுதுகிறார். முதலாவது மனந்திரும்பி, பின்பு 'விசுவாசியுங்கள்' என்று கிறிஸ்து பிரசங்கித்தார்.

மத்தேயு 9:13ல் "...நீதிமான்களை யல்ல, பாவிகளையே மனந்திரும்பு கிறதற்கு அழைக்க வந்தேன்" என்று கூறிய இயேசு லூக்கா 13:3ல் "அப்படியல்ல வென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" என்று கூறினார். மனந்திரும்புதலைக் குறித்தே இயேசுவின் சுவிசேஷம் இருந்தது.

### கிறிஸ்துவின் வருகைக்கு இஸ்ரவேலரை ஆயத்தப்படுத்த மனந்திரும்புதலை யோவான் ஸ்நானகன் பிரசங்கித்தான்.

"அந்நாட்களில் யோவான் ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து: மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்" (மத்தேயு 3:1-2). யூதர்களிடம் யோவான் கூறிய செய்தி எளிமையானது.

யோவான் பிரசங்கிப்பதைக் கேட்க எல்லாயிடங்களிலிருந்தும் மக்கள் வந்தனர். அவர்களிடம் மிகத் தெளிவாக, "உங்கள் மத்தியில் மேசியா சீக்கிரம் வரப்போகிறார். எனவே அவரைச் சந்திக்க ஆயத்தப்படுங்கள்! அவரது வருகையைக் கேள்விப்பட்டு நீங்கள் ஆனந்தம் கொண்டாலும் நீங்கள் பாவத்தைப் பற்றிக் கொண்டிருப்பதால் உங்கள் இருதயங்கள் அவரை வரவேற்க ஆயத்தமாக இல்லை".

வெளியே சுத்தமாகவும் பரிசுத்த மாகவும் காட்சியளிக்கிறீர்கள். ஆனால் உள்ளேயோ செத்த மனிதர்களின் எலும்புகளால் நிறைந்திருக்கிறீர்கள். தேவ பயம் கொஞ்சமும் இல்லாத விரியன் பாம்பின் சந்ததியாரே, நீங்கள் பாவிகள் என்று உணராதிருக்கிறீர்கள். இரட்சகரை விசுவாசித்து அவரைப் பின்பற்றுவதற்கு முன்பு உங்கள் பாவங்களை அகற்றுங்கள் என்று நான் உங்களை எச்சரிக்கிறேன். எனவே மனந்திரும்பி பாவத்தைவிட்டு விலகுங்கள் - உண்மையான மாறுதலை வெளிப்படுத்தும் வாழ்க்கையை நடத்துங்கள் என்று யோவான் கூறினான்.

பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு மக்களிடம் பிரசங்கித்தது என்ன?

பேதுருவின் சாட்சியைக் கேட்ட மக்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்க, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று பேதுரு பதிலளித்தான் (அப்போஸ்தலர் 2:37-38).

விசுவாசித்து இரட்சிக்கப்படுங்கள் என்று மட்டும் பேதுரு மக்களிடம் சொல்ல வில்லை; முதலாவது மனந்திரும்பி, பின்பு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் படியாகவே சொன்னான்.

மார்ஸ் மேடையிலே நின்றுகொண்டு, புறஜாதியரான அத்தேனருக்கு பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் என்ன? தேவன் ... மனந்திரும்ப

வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார் என்றுதான் நேரடியாகவே அங்கே பவுல் பிரசங்கித்தான் (அப்போஸ்தலர் 17:30).

தேவனை நம்புவது அந்த கிரேக்க ஞானிகளுக்குக் கஷ்டமான காரியமல்ல. அவர்கள் பல தெய்வங்களை நம்பினார்கள், "நம்புவது என்பது ஒரு பொழுதுபோக்காகவே அவர்களுக்கு இருந்தது. பாவத்தில் வாழ்ந்துகொண்டே எந்த தெய்வத்தையும் நம்பி வந்தார்கள். ஆகவே நம்பிக்கை மட்டும் போதாது".

பவுல் அம்மக்களிடம், இயேசுவை தெய்வங்களின் பட்டியலில் ஒரு தெய்வமாக சேர்க்க முடியாது. பிற தெய்வங்களையெல்லாம் நீங்கள் நம்பலாம். ஆனால், இயேசுவையும் அவ்வாறே வெறுமனே நம்ப முடியாது. இவர் உங்களை உங்கள் பாவங்களிலிருந்து விடுவிக்கவே அவர் வந்திருக்கிறார். அவரைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்புபவர்கள் மனந்திரும்பி கர்த்தரிடமாக திரும்ப வேண்டும் என்று கூறினான்.

மனந்திரும்புதலின் சுவிசேஷத்தைத்தான் அகிரிப்பா ராஜாவுக்கு பவுல் பிரசங்கித்தான்; "... நான் அந்த பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை. முன்பு தமஸ்குவிலும் எருசலேமிலும் யூதேயா தேசமெங்குமுள்ளவர்களிடத்திலும், பின்பு புறஜாதியாரிடத்திலும் நான் போய், அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும். மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன்" (அப்போஸ்தலர் 26:19-20).

மேலே குறிப்பிட்டுள்ள பகுதிகள், உங்கள் பாவங்களுக்குப் பரிகாரமாய் மனந்திரும்புங்கள் என்று இயேசுவும் யோவானும் பிரசங்கித்தபடியேதான் அப்போஸ்தலசபை அன்று பிரசங்கித்தது என்பதைத் தெளிவாக்குகின்றன.

## 'மனந்திரும்புதல்' என்றால் என்ன?

'மனந்திரும்புதல்' என்றால், தாங்கள் போய்க்கொண்டிருந்த வழியைவிட்டு எதிர்த்திசையிலே போவது என்று சில கிறிஸ்தவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டில் வரும் மனந்திரும்பு என்ற வார்த்தைக்கு, சிந்தையை மாற்றிக்கொள்ளுதல் என்று கிரேக்க மொழியில் பொருள்படுகிறது, என்று ஒருவர் சொல்லக்கேட்டேன்.

இல்லை-அவ்வார்த்தையின் முழுஅர்த்தம் அதுவல்ல! புதிய ஏற்பாட்டில் வரும் மனம் திரும்புதல் என்ற வார்த்தையின் பொருள் பின்வருமாறு: ''தேவனுக்கு எதிராக தான் செய்த பாவங்களுக்காக மனம் நொந்து தன்னையே வெறுத்தல்; தன்னுடைய செயலுக்காக வருந்தி புதிய பாதையில் செல்ல வாஞ்சிப்பதுதான் 'மனந்திரும்புதல்'.

மேலும், வருத்தமடைவதால் 'மனந்திரும்புதல்' முழுமையடையாது. ஆனால் உண்மையான வருத்தம் மனந்திரும்புதலுக்கு நேராய் வழிநடத்தும், "தேவனுக்கேற்ற துக்கம், பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல், இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ, மரணத்தை உண்டாக்குகிறது" (2 கொரிந்தியர் 7:10) என்று பவுல் குறிப்பிடுகிறார்.

மனந்திரும்பும் மனிதனிடம் ஏற்படும் உண்மையான துக்கம், அவன் வாழ்க்கை முழுவதிலும் தங்கும் தன்மையுடையது. இத்தகைய தேனுக்கேற்ற துக்கம் பாவங்களை வெறுக்கச் செய்து, தேவ பயத்தைக் கொடுத்து பாவம் இல்லாத வாழ்வு வாழ வாஞ்சையைக் கொடுக்கிறது.

கொரிந்திய சபைக் கிறிஸ்தவர்களுக்கு மனந்திரும்புதலின் செய்தியை வல்லமையோடு பவுல் பிரசங்கித்தார். வேதவசனத்தை மிகச்சிறந்த வகையில் போதிக்கும் போதகர்களிடம் கேட்டிருந்த கொரிந்திய விசுவாசிகள் தேவனால் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார்கள். இருப்பினும் சபையில் மன வேற்றுமைகளும் பாவமும் இருந்தது.

பவுல் அம்மக்களிடம், "அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லா விதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே" (2 கொரிந்தியர் 12:12) என்று சாட்சி கொடுக்கிறான். ஆனால் 20ஆம் வசனத்தில், "ஆகிலும் நான் வந்து, உங்களை என் மனதின்படியிருக்கிற வர்களாகக் காணாமலும் இருப்பேனோ என்று சொல்ல வேண்டியதாயிற்று.

பவுலின் பயம் என்ன? 21-ஆம் வசனத்தில் தனது பயத்தை இவ்வாறு வெளிப்படுத்துகிறார், "மறுபடியும் நான் வருகிறபோது, என் தேவன் உங்களிடத்தில் என்னைத் தாழ்த்தும்படிக்கு முன் பாவஞ்செய்தவர்களாகிய அநேகர் தாங்கள் நடப்பித்த அசுத்தத்தையும் வேசித்தனத்தையும் காமவிகாரத்தையும் விட்டு மனந்திரும்பாமலிருக்கிறதைக் குறித்து, நான் துக்கப்பட வேண்டிய தாயிருக்குமோவென்றும் பயந்திருக் கிறேன்".

இந்த இளகிய இருதயமுள்ள மேய்ப்பன் கொரிந்திய பரிசுத்தவான்களை நேசிக்கிறார். அறிந்து பாவத்தில் ஈடுபடும் வாழ்க்கை தவறு என்று அவர்களுக்கு இங்கு போதிக்கப்பட்டிருந்தது. எனவே பவுல், ''உங்களை நான் மீண்டும் சந்திக்கும்போது துக்கத்தினால் என் தலை கவிழ்வதை நீங்கள் காணுவீர்கள். அசுத்தத்திலும், வேசித்தனத்திலும், இச்சையிலும் நீங்கள் தொடர்ந்து ஜீவிப்பதை நான் கண்டால், நான் முழுவதுமாக நொறுங்கி விடுவேன். ஏனென்றால், சுவிசேஷம் உங்களது இருதயத்தில் கிரியை செய்திருக்கவில்லை. இன்னும் உங்கள் பாவத்துக்காக நீங்கள் மனந்திரும்பவில்லை. எனவே மனந்திரும்பும்படி உங்களை சத்தமிட்டு

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....

**Statement about ownership and other particulars about the Newspaper Echo of His Call (Tamil) - Form IV (See Rule 8)**

1. Place of Publication : **18, Mohammed Abdullah Sahib Street, Chepauk, Chennai - 600 005**
2. Periodicity : **Monthly**
3. Printer, Editor, Owner & Publisher : **S. Sam Selva Raj** (Same Address)
4. Nationality : **Indian**

I **S. Sam Selva Raj**, hereby that the particulars given above are true to the best of my knowledge and belief.

**March 2021** **S. Sam Selva Raj.**

GREAT COMMISSION PARTNERS
ECHO OF HIS CALL MINISTRIES
SINCE 1969

# பிரதானக் கட்டளைப் பங்காளர் - துதி மற்றும் ஜெப குறிப்புகள்



## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

## 2021 மார்ச் 19 முதல் 2021 ஏப்ரல் 18 வரை

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

**மார்ச் 19 :** நமது தலைமைச் சபையில் கடந்த மாதம் நிகழ்த்தப்பட்ட ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார்.

**மார்ச் 20 :** நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையில் புதிதாக மணிப்பூரி மொழியினை அச்சிட கர்த்தர் உதவி புரிந்தார்.

**மார்ச் 21 :** நமது வேதாகமத் தபால்வழிக் கல்வி மற்றும் அஞ்சல்வழி இறையியல் கல்விகளை ஆசீர்வதித்து வரும் கர்த்தரைத் துதிப்போம்.

**மார்ச் 22 :** நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் கடந்த மாதம் நிகழ்த்தப்பட்ட ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார்.

**மார்ச் 23 :** நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், மற்றும் பிரதான கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்தார்.

**மார்ச் 24 :** எழுப்புதலுக்குரிய புதிய விசுவாசிகளை ஆசீர்வதித்த தற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**மார்ச் 25 :** நமது அனைத்து மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாருக்காக கர்த்தரைத் துதிப்போம்.

**மார்ச் 26 :** நமது ஊழியப்பிரயாணங்களை ஆசீர்வதித்ததிற்காக நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

**மார்ச் 27 :** நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும், அவர்களது குடும்பத்தினர் அனைவருக்காகவும் நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

**மார்ச் 28 :** நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை நமது அச்சகத்திலேயே 17 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு அனைத்து பணித்தளங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. அதற்காக நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

**மார்ச் 29 :** நமது **St. பால்ஸ் மெட்ரிகுலேஷன்** பள்ளியின் இணையவழி வகுப்புகளை ஆசீர்வதித்து வருவதற்காக நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

**மார்ச் 30 :** நமது St.பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்காக நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

**மார்ச் 31 :** 2020ம் வருடம் இந்த Covid-19 மத்தியிலும் நமது வாழ்வாதாரத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார்.

**ஏப்ரல் 01 :** 2020ம் வருடம் இந்த Covid-19 மத்தியிலும் நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார்.

**ஏப்ரல் 02 :** நமது தலைமைச் சபையில் ஆராதனைகள் மீண்டும் தொடர்ந்து நடைபெற்றுவருவதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.

**ஏப்ரல் 03 :** நமது தலைமைப்போதகர் **எஸ். சாம் செல்வ ராஜ்** அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய வல்லமைகளிலிருந்தும் பாதுகாத்து வருகிறார்.

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

**ஏப்ரல் 04 :** சென்ற வருடத்தில் நாம் சந்தித்த நண்பர்களுக்காகவும், விசுவாசிகளுக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

**ஏப்ரல் 05 :** நம்முடைய சுவிசேஷ அச்சகத்திற்காக ஊக்கமாக ஜெபிப்போம்.

**ஏப்ரல் 06 :** அனைத்து சமயங்களின் ஒற்றுமைக்காக தேவனிடத்தில் ஜெபிப்போம்.

**ஏப்ரல் 07 :** உலகிலுள்ள நாடுகள் அனைத்திற்குள்ளாக சமரசம் நிலவிட ஜெபிப்போம்.

**ஏப்ரல் 08 :** போதைப்பழக்கத்திற்கு அடிமையானவர்களின் மீட்புக்காக கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

**ஏப்ரல் 09 :** நமது மணிப்பூரி மொழியின் இணை ஆசிரியர் Rev. Dr. ரிஷிகாந்தா சொரோகாய்பம் மற்றும் அவரது குடும்பத்தினரின் மேலான வாழ்வுக்காக கர்த்தரிடம் ஜெபிப்போம்.

**ஏப்ரல் 10 :** கர்த்தரிடம், நமது ஆங்கில இணையாசிரியர் சகோ. M. பால்ராஜ் அவர்களின் சுகவாழ்வுக்காகவும், நோயின் பாதிப்பிலிருந்து விடுதலை பெறவும் ஜெபிப்போம்.

**ஏப்ரல் 11 :** கொரோனா வைரஸ் இவ்வுலகைவிட்டு முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டி மிகுந்த ஊக்கமாக ஜெபிப்போம்.

**ஏப்ரல் 12 :** நமது நிறுவனத்திற்காகவும், நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்காகவும் மற்றும் அவர்களது குடும்பத்திற்காகவும் ஜெபிப்போம்.

**ஏப்ரல் 13 :** இவ்வருடத்திற்கான நம்முடைய செலவுகளுக்காகவும், கர்த்தருடைய அன்பின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.

**ஏப்ரல் 14 :** நமது வடஇந்திய ஊழியர்களுக்காகவும் மற்றும் அவர்களது சுக வாழ்வுக்காகவும் கர்த்தரிடத்தில் ஜெபிப்போம்.

**ஏப்ரல் 15 :** நமது சுவிசேஷ அச்சக பாதுகாப்பிற்காகவும், நேர்த்தியாக வேலை நடப்பதற்காகவும் ஜெபிப்போம்.

**ஏப்ரல் 16 :** எல்லாவிதமான ஊழியர்களும் மற்றும் விசுவாசிகளும் ஒற்றுமையுடன் காணப்பட வேண்டி ஜெபிப்போம்.

**ஏப்ரல் 17 :** நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் விஸ்தீரணத்திற்காக கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

**ஏப்ரல் 18 :** நமது தலைமைப்போதகர் **எஸ். சாம் செல்வ ராஜ்** அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய வல்லமைகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க தேவனிடத்தில் ஜெபிப்போம்.

.... 4-ம் பக்கத் தொடர்ச்சி

அழைக்க வேண்டிவரும்" என்று கவலையோடு கூறுகிறார்.

## பவுலின் இந்த வார்த்தைகள் என்னை வெட்கப்படுத்தியது

பவுலின் வார்த்தைகளை நான் வாசிக்கும்போது, என்னுடைய ஊழியத்தை ஆராயலானேன், "இயேசு பிரசங்கித்த சுவிசேஷத்தை நான் சுருக்கிவிட்டேனா? கிறிஸ்துவைப் பின்பற்றுவதினால் தியாகம் செய்ய வேண்டிய காரியங்களை விளக்கும் பகுதிகளை வேத புத்தகத்திலிருந்து அகற்றி விட்டேனா? இயேசு தம் ஸ்தானத்திலிருந்து கீழே இறங்கிவரும் படியாய், "விசுவாசித்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று நான் பிரசங்கிக்கிறேனா?

இன்றைய சபையைப் பார்க்கும்போது, உண்மையான மனந்திரும்புதலுக்கு அடையாளமான "தேவனுக்கேற்ற துக்கத்தை" குறித்து சுவிசேஷகர்களாகிய நாம் வலியுறுத்துகிறோமா? இல்லாவிடில், ஒரு பொய்யான சமாதானத்துக்கு நேராய் மனந்திரும்பாத மக்களை வழி நடத்துகிறோமா? இயேசுவே நான் உம்மை நம்புகிறேன், என்று அவர்கள் கூறும்படி செய்து தவறாய் அறிவுறுத்துகிறோமா?

பல ஊழியங்களின் மூலம் இயேசுவிடம் வரும் மக்களின் எண்ணுக்கடங்காத எண்ணிக்கையைக் கூட்டிச் சொல்வதை அடிக்கடி கேள்விப் படுகிறோம். "சிறைச்சாலைகளிலும், பள்ளிகளிலும், ஆதிவாசிகளுக்கான கூட்டங்களிலும் நூற்றுக்கணக்கான மக்கள் இரட்சிக்கப்படுவதாக, அதவாது என் பிரசங்கம் முடிந்ததும் எல்லோரும் இரட்சிப்புக்காக முன்னே வந்தார்கள்" என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இல்லை - இது மிகைப்படுத்திக் கூறும் ஒரு கூற்றாகும்! உண்மையில் என்ன நடக்கிறது என்றால், எல்லாரும் ஒரு ஜெபத்தைக் கூறுகிறார்கள். அவ்வார்த்தைகளைக் கூறி ஜெபிக்கச் சொல்லும்போது அவர்கள் அவ்வாறே ஜெபிக்கிறார்கள். அவர்களுடைய ஜெபத்தின் பொருளை அவர்கள் அறியாமல், பெரும்பாலான மக்கள் தங்கள் பாவ வாழ்க்கைக்கே திரும்பி விடுகின்றனர்!

பரிசுத்த ஆவியானவரின் ஆழமான கிரியைகளை அத்தகைய மக்கள் அனுபவிப்பதே இல்லை. அதன் பலனாக, அவர்கள் மனந்திரும்பாமல், தங்கள் பாவங்களுக்காகத் துக்கிக்காமல், உண்மையான விசுவாசமும் இல்லாமல் போய்விடுகிறார்கள். இயேசு கொடுக்காத ஒன்றை நாம் அவர்களுக்கு கொடுக்கிறோம் - மனந்திரும்புதலில்லாத இரட்சிப்பு! இது துக்ககரமான காரியம்!

பாவ உணர்வோடு வரும் உணர்ச்சியைக்கூட இன்றைய சபை எடுத்துவிட்டது. இரட்சிக்கப்படுகிறவர்களின் கண்களில் கண்ணீரை இப்பொழுதெல்லாம் காணமுடிவதில்லை. கண்ணீர் யாரையும் இரட்சிப்பதில்லை என்று நான் அறிவேன். ஆனால் உண்மையான உணர்ச்சிகளோடுதான் தேவன் நம்மை உண்டாக்கியிருக்கிறார். நரகத்துக்கு நேராய்ப் போய்க் கொண்டிருந்த எந்த பாவியும் கர்த்தரைத் தனது வழிகளால் எவ்வாறு துக்கப்படுத்தியிருக்கிறான் என்று எண்ணி பரிசுத்த ஆவியானவரால் உணர்த்தப்பட்டு அதற்கேற்ற துக்கம் அடைவான்.

இயேசுவை மறுதலித்தபோது அப்போஸ்தலனாகிய பேதுரு இத்தகைய தேவனுக்கேற்ற துக்கத்தை உணர்ந்தான். இயேசு அவனிடம் ஏற்கனவே கூறியிருந்த வார்த்தைகள் திடீரென்று அவனுக்கு நினைவு வந்தது. சேவல் இரண்டுதரம் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தனக்குச் சொன்ன வார்த்தையைப் பேதுரு நினைவு கூர்ந்து, மிகவும் அழுதான் (மாற்கு 14:72).

இந்த வார்த்தைகளை நினைவு கூர்ந்த பேதுரு உணர்ச்சி வசப்பட்டான். திடீரென்று அழுதுகொண்டே எருசலேமினூடே ஓடிச்சென்று, கர்த்தரை நான் மறுதலித்தேன் என்று கதறத் தொடங்கினான்.

அன்பானவர்களே! நம்முடைய சரீரத்தில் அத்தகைய மனந்திரும்புதலை நாமாகவே கொண்டுவர முடியாது. நமது அன்பின் இரட்சகரை எவ்வாறு காயப்படுத்தினோம் என்று பரிசுத்த ஆவியானவர்தான் பேதுருவுக்கு வெளிப்படுத்தியது போல நமக்கும் வெளிப்படுத்த முடியும். அத்தகைய வெளிப்படுத்துதல், தேவனுக்கேற்ற துக்கத்தால் நம்மை நிரப்ப வேண்டும்.

அக்காலத்து ப்யூரிட்டன் (Puritan) எழுத்தாளர்களின் உபதேசங்கள் எல்லாவற்றையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லையெனினும் பரிசுத்தம் என்ற அவர்களது கொள்கைகளை நான் நேசிக்கிறேன். கேட்கிறவர்களின் இருதயங்கள் ஆழமாக உழப்பட்டு ஆயத்தம் செய்யப்படவில்லையென்றால், உண்மையான விசுவாசத்தின் விதைகளை விதைக்க முடியாது என்று அவர்கள் நம்பினார்கள். எனவே, அவர்களது பிரசங்கங்கள் உண்மையான மனந்திரும்புதலை மக்களிடையே உண்டாக்கின. காலப்போக்கில் அவை நல்ல வலிமை வாய்ந்த முதிர்ந்த உண்மையுள்ள கிறிஸ்தவர்களை உருவாக்கின.

இன்று உழுதல் இல்லாமலேயே விதைக்கப்படுகிறது. இன்றைய பிரசங்கங்களில் பலர் நிலத்தின் மேற்பகுதியைக் கடந்து கீழே செல்வதில்லை. ஆழமான உழுதல் என்பது பாவநோயை மட்டும் சுட்டிக்காட்டுவதில்லை. அது பாவத்தின் மூல காரணத்தையே தோண்டி எடுத்துவிடுகிறது. இன்றைய பல பிரசங்கங்களே நோயை அசட்டை செய்து விட்டு நோய்க்கான மருந்தையே மையமாகக் கொள்கின்றன. அறுவை சிகிச்சையைத் தவிர்த்து மருந்துகளை மாத்திரம் அளிக்கின்றன.

தாங்கள் வியாதிப்பட்டதையே அறியாத மக்களிடத்தில் அவர்களது பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. தாங்கள் நிர்வாணிகள் என்று அறியாத மக்கள் மேல் நீதியின் வஸ்திரம் போடப்படுகிறது. விசுவாசிக்க வேண்டும் என்று கூட அறியாத மக்கள், கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி

### அன்பின் வேண்டுகோள்

நீங்கள் அறிந்தபடி, நம் ஊழியங்களுக்குரிய ஊழியர் சம்பளம், காகிதங்கள் வாங்குவது, பிரயாணங்கள் போன்ற மிக முக்கியமான அடிப்படைகளை சந்திக்க நம்மிடம் பணம் இல்லாமல் நெருக்கப்படுகிறோம். பொதுவாக நாம் யாரிடமும் பொருளாதாரத் தேவைகளைக் கேட்பதில்லை. எனவே, இந்த ஊழியங்களை உண்மையாய் நேசிக்கிறவர்கள் உங்களால் இயன்ற காணிக்கைளை மணி ஆர்டர், காசோலை, டிமாண்ட் டிராப்ட், Phone Pay, NEFT போன்ற ஏதாவது வழிகளில் அனுப்பி உதவ வேண்டுகிறோம். ஏற்கனவே உதவியவர்களுக்கு நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

– ஆசிரியர், அழைப்பின் எதிரொலி

நிர்பந்திக்கப்படுகிறார்கள். அத்தகைய மக்கள், இயேசுவையும் என் வாழ்க்கையில் சேர்த்துக் கொண்டால் எனக்கு நஷ்ட மொன்றுமில்லை என்று எண்ணுகிறார்கள்.

மனந்திரும்புதலின் அவசியத்தைக்குறித்து வல்லமையான ஆங்கில பிரசங்கியாரான சி.எச். ஸ்பர்ஜன் இவ்வாறு கூறினார்.

துக்கத்தோடு கூடிய மனந்திரும்புதல் இன்றும் நிகழ்ந்தாலும், அதைக் குறித்து அதிகமாய் சமீபத்தில் நான் கேட்கவில்லை. இந்நாட்களில் வெகு சீக்கிரமாக மக்கள் விசுவாசத்தில் குதித்து விடுகிறார்கள்...என்னுடைய பழைய நண்பனாகிய மனந்திரும்புதல் இன்னும் மரிக்கவில்லை. மனந்திரும்புதலை நான் நேசிக்கிறேன். இது விசுவாசம் என்பதின் இரட்டைச் சகோதரியைப் போலிருக்கிறது.

ஈரமில்லாத கண்ணோடுகூடிய விசுவாசத்தைக் குறித்து எனக்கு தெளிவில்லை. கண்ணீரோடுதான் கிறிஸ்துவினிடத்தில் நான் வந்தேன் என்று அறிவேன். இயேசுவில் –இயேசுவில் மட்டுமே இரட்சிப்பு உண்டு என்று அறிந்து என்னுடைய மீறுதல்களையெல்லாம் அறிக்கை செய்து, அழுகையோடும் விண்ணப்பத்தோடும்தான் விசுவாசத்தால் கல்வாரியினிடத்தில் நான் வந்தேன்.

## எங்களது சபை ஸ்தாபிக்கப்பட்டபோது போதகர்களாகிய நாங்கள் முதல் சில வருடங்கள் தேவனது சட்டங்களையே பிரசங்கித்தோம். ஏன், நெடுங்காலமாய் தேவ சட்டங்களையே நாங்கள் பிரசங்கித்தோம்?

ஏன் நெடுங்காலமாய் தேவ சட்டங்களையே நாங்கள் பிரசங்கித்தோம்?

ஏனென்றால், கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்த எங்களது சபையின் சில அங்கத்தினர்கள், தங்கள் வாழ்க்கையில் கிறிஸ்தவர்களாக இருக்கவில்லை. அந்த ஆரம்ப வருடங்களில் ஆராதனையின் முடிவில் பலர் இரட்சிப்புக்காக பீடத்தினண்டையில் வந்தார்கள். ஆனால் பெரும்பாலோருக்கு பாவத்தைக் குறித்த உணர்வே இல்லாமலிருந்தது.

திரையுலக நடிகர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், அவ்வாரம் முழுவதும் அசுத்தமான நிகழ்ச்சிகளுக்குள்ளாய் சென்று விடுவார்கள். ஓரினச் சேர்க்கைக்காரர்கள் இரட்சிப்புக்காக ஜெபிப்பார்கள். ஆனால் தொடர்ந்து பாவத்தில் ஈடுபடுவார்கள். பலர் பீடத்தண்டையிலே வந்து இயேசுவை அறிக்கை செய்தாலும் வேசித்தனத்தையும், போதை மருந்துகளையும் விட்டு விலகவில்லை.

எனவேதான் எங்களுடைய பீடத்திலிருந்து பாவ உணர்வைக்குறித்து நாங்கள் முழங்கினோம்! எல்லாவித பாவங்களையும், முரட்டாட்டங்களையும், கீழ்ப்படியாமைகளையும் வெளிப்படையாகக் கூறும்படி எங்களுடைய போதகர்களை பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தினார். நரகத்தைப்பற்றி பயங்கரமாக நாங்கள் பிரசங்கித்ததால், கிறிஸ்துவின் பரிசுத்தத்தைக் கேட்ட சபையினர் நடுங்கினர்.

தேவசட்டத்தைப் பற்றிப் பிரசங்கிப்பது அந்நாட்களில் எங்களுக்கு அவசியமாயிருந்தது. ஒளிப்பிடத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொன்றையும் வெளிப்படுத்தும் தேவனது கண்ணாடியாக அது இருந்தது. அது சபையாருக்கும் பாவத்தைக் குறித்த விழிப்புணர்ச்சியைக் கொடுத்தது. பலர் சபையைவிட்டு வெளியேறினாலும், மற்றவர்கள் உண்மையான மனந்திரும்புதலுக்கு நேராய்க் கடந்து வந்தார்கள்.

இவ்வாறு மனந்திரும்புதல் சபையில் நடந்து கொண்டிருக்கும்போது, கிருபையைப் பற்றி பிரசங்கிக்கும்படி பரிசுத்த ஆவியானவர் எங்களை வழி நடத்தினார். புதிய உடன்படிக்கையைப் பற்றியும். விசுவாசத்தால் நடக்கும்போது பாவத்தின் மேல் பரிசுத்த ஆவியானருக்கு இருக்கும் வல்லமையைப் பற்றியும் போதித்தோம். வெகு விரைவிலேயே பரிசுத்தவான்களைக் கட்டுகிறவர்களாகக் காணப்பட்டோம்.

இந்த அனுபவங்கள் பாவத்தைக்குறித்து மட்டும் பிரசங்கிப்பதின் அபாயங்களைக் கற்றுக்கொடுத்தன. பாவத்தைக் குறித்து மட்டும் பிரசங்கித்தால் மக்களுக்கு நம்பிக்கை அற்றுப்போகும், சிலுவை தரும் நம்பிக்கையை நோக்காமல் தங்களையே நோக்கி சோர்ந்து போய்விடுவார்கள்.

இருப்பினும், கர்த்தருடைய சபையில் தேவ ஆவியானவர் தேவ நீதியைக்குறித்து பிரசங்கிக்கத் தேவைப்படும் போதெல்லாம் நம்பி பிரசங்கிக்கலாம். மக்கள் எளிதாக இயேசுவை நம்பத் தொடங்கிவிட்டால், எல்லா கிருபையோடும் இரக்கத்தோடும் இயேசுவே தேவ சட்டத்திட்டங்களை உறுதியுடன் கொண்டு வருவார்.

மனந்திரும்புதல் என்பது ஒரு காலத்தில் மட்டும் சம்பவிப்பதல்ல, பாவத்தில் ஏற்படும் துக்கம் என்றும் சிந்தித்தவர்களாயிருக்க வேண்டும்.

ஸ்பர்ஜன் இவ்வாறு எழுதுகிறார்: ‘‘முப்பது வருடங்களுக்கு முன் இயேசுவிடத்தில் நான் வந்தபோது பாவத்தின்மேல் எனக்கு இருந்த வெறுப்பைவிட இன்று அதிகமாக உள்ளது. அன்று ‘பாவம்’ என்று அறியாதவற்றை இன்று பாவமாகக் கருதுகிறேன். என் இருதயத்தின் தீமைகளைக் குறித்த அறிவு இப்பொழுது அதிகமாக உள்ளது.

பாவத்தைக் குறித்த வேதனை, என்றும் பெய்யும் மழையைப்போல ஒரு இரட்சிப்பட்ட மனிதனின் வாழ்க்கையில் என்றும் காணப்பட வேண்டும்...தான் பாவம் செய்ததால் அவன் என்றும் துக்கிக்கிறான்”.

## எபேசு சபைக்கு இயேசு சொன்ன வார்த்தைகள் என்னை நடுங்கச் செய்கின்றன!

வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் குறிப்பிடும் ஏழு சபைகளைக்குறித்து நீங்கள் அறிவீர்களல்லவா?இயேசுவால் புகழப்பட்ட ஒரு சபைதான் எபேசு சபை.

எபேசு சபையைப்போல என்னுடைய சபையை எண்ணிக் கொள்கிறேன். அதிக ஜனத்தொகையும், பாவம் நிறைந்ததுமான அப்பட்டணத்தில் அந்த விசுவாசிகள் சாட்சிகளாயிருந்தார்கள். ஏற்காமலும் தியாகத்தோடு அம்மக்கள் வாழ்ந்து வந்தார்கள். சாத்தான் எத்தகைய சோதனைகளை முன்னே கொண்டு வந்தாலும் தங்கள் முழு இருதயத்தாலும் தேவனை நேசித்து விசுவாசத்தில் உறுதியாக நின்றார்கள்.

இருப்பினும் அவர்களிடத்தில் ஒரு குறை உண்டென்று கிறிஸ்து அறிந்தார். பிரகாசமான விளக்கைப்போல் இருந்த இந்த சபையை அவர் நேசித்ததால் அது மரித்துவிட அவர் விரும்பவில்லை. எனவேதான் எபேசியரிடம், “ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு” (வெளி. 2:4) என்று கூறினார்.

“உன்னுடைய நெருப்பு அணையப்போகிறது! என்னிடத்தில் உனக்கிருந்த அன்பினிமித்தமாய் வந்த உண்மை இப்பொழுது தேய்ந்து போகிறது. பிரசங்கங்களைக் கேட்பதிலே நீ திருப்தியாய் உட்கார்ந்துவிட்டாய்.

என்னுடைய காரியங்களை அசட்டை செய்து உன்னுடைய சொந்த காரியங்களையே சிந்தித்துக் கொண்டிருக்கிறாய். முன்பு நீ இருந்த ஸ்தானத்திலிருந்து வெகு தூரத்தில் விழுந்து விட்டாய்" என்று இயேசு கூறுகிறார்.

எனவே, அன்பான கிறிஸ்தவனே! இயேசுவுக்காக இன்னும் நீ அக்கினியாயிருக்கிறாயா? இரட்சிக்கப்பட்ட ஆதி நாட்களில் அவரை நேசித்தது போல இன்று அவரை நேசிக்கிறாயா? அல்லது அவரது காரியங்களில் உன்னுடைய விருப்பம் குறைந்து விட்டதா? அப்படியானால் உனக்கெதிராய் அவர், "நீ ஆதியில் கொண்டிருந்த அன்பைவிட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு," என்று குற்றம் சாட்டுகிறார்.

"மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய். உன் பாவங்களுக்காய் மனஸ்தாபப்படு. உன் மனஸ்தாபம் ஆதியில் நீ இருந்த இடத்திற்கு உன்னைக் கொண்டு செல்லும்.

அவரது எச்சரிப்பைப் பொருட்படுத்தாவிட்டால் நடக்கும் சம்பவத்தையும் அவர் குறிப்பிடுகிறார்: "நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில் உன் விளக்குத் தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன்" (வெளி. 2:5).

நாம் மனந்திரும்பவில்லையென்றால் நமக்குக் கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய அதிகாரத்தை அவர் எடுத்துவிடுவார். இந்த அதிகாரம், நகரத்திலிருக்கும் நமது அதிகாரமாயிருக்கலாம் அல்லது சமுதாயத்தில் இருக்கும் நமது அதிகாரமாயிருக்கலாம்.

இக்காலங்களில் உலகமெங்கும் சபைகள் மூடப்படுகின்றன. அவைகள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள், பொருளாதாரம், ஜீவன் ஆகிய எல்லாவற்றையும் இழந்து, அவருடைய பிரசன்னத்தையும் இழந்து விட்டன.

முப்பது வருடங்களுக்கு முன் அத்தகைய சபைகளில் நான் பிரசங்கித்த போது, வைராக்கியமான விசுவாசிகளால் சபைகள் நிறைந்திருந்தன. இன்று வெகு சிலரே அச்சபைகளிலிருக்கின்றனர். "கர்த்தரின் ஆவியானவர் விலகிவிட்டார்" என்று அவற்றின் கதவுகளில் தேவன் எழுதியிருக்கிறார்!

இதே செய்தியை இன்று ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தேவன் கூறுகிறார். ஆயிரம் வருடங்கள் எபேசு சபைக்காக தேவன் காத்திருந்தார். ஆனால் அவரால் பொறுக்க முடியாத அளவுக்கு அவர்களது பின்மாற்றம் நடந்தது.

கிப்பன் என்ற சரித்திர ஆசிரியர், ''எபேசுவின் முதல் விளக்குத்தண்டு அணைந்து விட்டது. பிலதெல்பியா சபை ஒன்றுதான் நிலை நிற்கிறது'' என்று எழுதுகிறார்.

இயேசு தமது எச்சரிப்பை இவ்வாறு முடிக்கிறார். "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப்புசிக்கக் கொடுப்பேன்" (வெளி. 2:7).

அன்பான பரிசுத்தவானே! இயேசுவே அந்த மரம்! "நீ மனந்திரும்பினால் என்னிடத்திலிருந்தே உனக்கு நிரந்தரமான ஜீவனைக் கொடுப்பேன். இந்த ஜீவன் உன்னுடைய அன்பிலும் நற்கிரியைகளிலும் வெளிப்படும்" என்று நம்மிடம் கூறுகிறார்.

எனவே இப்பொழுதே, "உண்மையான மனந்திரும்புதலின் இருதயத்தை எனக்குத்தாரும் கர்த்தாவே. உம்மை ஆதியில் நான் நேசித்த விதத்துக்கு என்னைக் கொண்டு செல்லும்" என்று ஜெபியுங்கள். நீங்கள் மனந்திரும்பினால் கிறிஸ்துவின் மகிமை புதிய விதத்தில் உங்களுக்கு வெளிப்படும். அம்மகிமை உங்களைச் சுற்றிலும் வெளிப்படும்.

**********


# நெகேமியா வேதாகமக் கல்லூரிகள், சென்னை

**அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்** (Estd.:1969)

**Affiliated to Hindustan Bible Institute and College (HBI), Chennai**

**மாலை நேர வகுப்புகள் – சேப்பாக்கம் மற்றும் சந்தோஷபுரம் – இறையியல் டிப்ளோமா**

(Diploma in Theology) (திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை)

**பயிற்சிக் காலம்:** ஓர் ஆண்டு (சிறப்புக் கருத்தரங்குகளும் உண்டு)

**கல்வித் தகுதி** 10–ம் வகுப்பு மற்றும் அதற்குமேல் **போதனா மொழி :** தமிழ்

**முழு நேர வகுப்புகள் – வேளச்சேரி இறையியல் டிப்ளோமா**

Diploma in Theology **பயிற்சிக் காலம்** – ஓர் ஆண்டு (களப்பயிற்சிகளும், நிர்வாகப் பயிற்சிகளும் உண்டு) **கல்வித் தகுதி :** 10–ம் வகுப்பு மற்றும் அதற்குமேல் **போதனா மொழி :** ஆங்கிலம் மற்றும் இந்தி

**ஆரம்பநாள் : 01-06-2021**

**விவரங்களுக்கு: போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்,**
நெகேமியா வேதாகமக் கல்லூரிகள், **அழைப்பின் எதிரொலி,**
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
போன்: (+91–44) 2852 8282, 2852 9293 செல்: (+91) 98410 71852, 95661 31858

E-mail: sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in Websites: www.echoofhiscall.org / www.echoofhiscall.com



# குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

**தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுகளுக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம்!**

1969ம் வருடம் முதல் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்கள் மூலமாக இலக்கிய ஊழியத்தையும். சபை ஸ்தாபிக்கும் ஊழியத்தையும் செய்ய கர்த்தர் எங்களை உபயோகித்து வருகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்க ஏராளமான தலைவர்களையும் உருவாக்க தேவன் எங்களைப் பயன் படுத்தியுள்ளார்.

“Biblecor” என்ற பெயரில் அஞ்சல் வழி வேதாகமக் கல்வி ஒன்றினையும் 1980ம் ஆண்டு ஆரம்பிக்க கர்த்தர் கிருபை செய்தார். இந்தியாவின் பல பகுதிகளிலுள்ள மக்கள் இதன் மூலம் பயன்பட்டார்கள். ஏனென்றால் இக்கல்வியை நாங்கள் தமிழ், ஆங்கிலம், மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளில் அளிக்க முடிந்தது.

ஒவ்வொரு நாளும் அநேக பாடப் புத்தகங்களை நாங்கள் அஞ்சல் வழியாக அனுப்ப வேண்டியிருந்தது. தேவன்மேல் விசுவாசம் வைத்து 30,000 பிரதிகளை அச்சடிக்க நாங்கள் சொல்லியபடி அளவு புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டு எங்களிடம் ஒருநாள் வந்து சேர்ந்தது.

ஆனால் எங்களது அலுவலக கட்டிடத்தின் சொந்தக்காரர், கிறிஸ்துவின் பணி விரிவடைவதை விரும்பாததின் காரணமாக அப்புத்தகங்களை அந்தக் கட்டிடத்தில் வைக்க அனுமதிக்கவில்லை. அப்புத்தகங்களை வைக்க வேறு ஏதாவது கட்டிடம் வாடகைக்குக் கிடைக்குமா என்று பல வழிகளில் முயன்றும் எங்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. கர்த்தர் தாமே ஒரு வழியைத் திறக்க வேண்டுமென்று ஜெபித்துக் கொண்டிருந்தோம்.

திடீரென்று சென்னையிலுள்ள திரு. இராமலிங்கம் என்பவரை எங்களோடு தொடர்பு கொள்ள தேவன் வழி திறந்தார். எங்களுடைய தேவையை அவர்களிடம் கூற ஆவியானவர் ஏவினார். அவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் தங்களுடைய வீட்டில் அப்புத்தகங்களை வைக்க அனுமதித்தார். அவரது துனைவியார் திருமதி. சாராள் சரஸ்வதியும் மிகுந்த ஒத்துழைப்பு நல்கினார்.

எங்களுக்குத் தேவை ஏற்பட்ட போதெல்லாம் அவர்களது வீட்டிற்குச் சென்று அப்புத்தகங்களை நாங்கள் எடுத்துக் கொள்வோம். தேவன் அக்குடும்பத்தாரை விசேஷமாக ஆசீர்வதித்தார்.

இப்பொழுதோ நல்ல விசாலமான பள்ளியையும், வேதாகமக் கல்லூரிகளையும் நாங்கள் சொந்தமாகக் கட்டவும், எவ்வளவு புத்தங்கள் வேண்டுமானாலும் வைக்குமளவுக்கு வசதிகளை தேவன் எங்களுக்குத் தந்திருக்கிறார். மேலும், பலமொழிகளில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கும் புத்தங்களை அச்சிடும் அச்சகத்தையும் எங்களுக்கு தேவன் சொந்தமாகத் தந்து அச்சடிக்கப்பட்டவைகளைப் பாதுகாக்கும் இடத்தையும் அவற்றை அனுப்பும் பணியைச் செய்ய வேண்டிய இடத்தையும் தந்துள்ளார்.

இப்படியாக தேவன் எங்களது கண்ணீரைக் கண்டு எங்களுடைய ஜெபங்களுக்கெல்லாம் பதிலளித்துள்ளார்.

அன்பான வாசகர்களே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்றும் உயிரோடிருக்கிறார். உங்களது வாழ்க்கையிலும் அற்புதங்களைச் செய்வார். ஏதோ ஒரு பெரிய போராட்டத்திற்குள்ளாக நீங்கள் கடந்து சென்று கொண்டிருப்பீர்களானால் மனம் தளர்ந்து விடாதீர்கள். நமது தேவனாகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து அற்புதம் பெறும்படி விசுவாசியுங்கள். நிச்சயமாக வெற்றி பெறுவீர்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

> **திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்** (யோவான் 10:10)
> என்று ஆண்டவர் இயேசு கிறிஸ்து சொன்னார்.


**NEHEMIAH BIBLE COLLEGE,**
CHENNAI.

**WARDEN WANTED**

We need a Hindi and English knowing Theologian to work in our Nehemiah Residential Bible College as **Warden.** Salary, Boarding and Lodging will be provided.

Please contact:
**Pr. S. Sam Selva Raj,**
Cell : 98412 71858 / 98410 71858
E.Mail : sam@echoofhiscall.org

**ECHO OF HIS CALL**
CHENNAI.

**HON. CO-ORDINATORS WANTED**

Thousands of friends like you are being blessed by reading Echo of His Call in 17 languages throughout the world. Now we need **Honorary Co-ordinators** in your language to evaluate the standard of messages published in Echo of His Call and give suggestions to improve each month.

Please contact: **Pr. S. Sam Selva Raj,**
**Cell : 98412 71858 / 98410 71858**
**E.Mail : sam@echoofhiscall.org**

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், சமூக சேவைகள்**

✲ வருட சந்தா ரூ. 100/– ✲ ஆயுள் சந்தா ரூ. 2000/–

அழைப்பின் எதிரொலி ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், தேவ பிள்ளைகளாகிய நீங்கள் விரும்பி அளிக்கும் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் தங்களை ஏவும் விதத்தில் தாங்கள் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களைத் தாங்குங்கள். சுவிசேஷம் சென்றடையாத இடங்கள் மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்குத் தேவை.

உங்கள் விலாசம் மாறினால் உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அழைப்பின் எதிரொலி பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

நம் அழைப்பின் எதிரொலி பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) மூலம் Echo of His Call என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது அழைப்பின் எதிரொலி பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதரரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.**

**அழைப்பின் எதிரொலி,**
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293 செல்: (+91) 98410 71852
E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in
Websites : www.echoofhiscall.org / www.echoofhiscall.com

**YOU CAN SEND YOUR DONATIONS ON ONLINE ALSO**

## ஓர் அவசர நற்செய்தி!



முழுநேர வேதாகமக் கல்லூரியில் படிக்க முடியாதவர்களுக்கு



### ஓர் அரிய வாய்ப்பு!!

**நமது**
**நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்**
**மறுபடியும் சென்னையில்**
**திறக்கப்படவுள்ளன!!!**

**ஆரம்ப நாள் : 01-06-2021**

### மாலை நேர தமிழ் வழிக் கல்வி

**(2 இடங்கள்)**

1. **நெகேமியா வேதாகமக் கல்லூரி,**
   அழைப்பின் எதிரொலி, 10, முகமது அப்துல்லா
   2 வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
2. **ST. பால்ஸ் பள்ளி வளாகம்,**
   8/18, வேளச்சேரி மெயின் ரோடு,
   சந்தோஷபுரம் - விஜயநகரம் பஸ் நிறுத்தம்,
   மேடவாக்கம், சென்னை-600 100.

**ஹிந்தி மற்றும் ஆங்கில வழி முழுநேரக் கல்வி**

**நெகேமியா வேதாகமக் கல்லூரி,**
வேளச்சேரி இரயில் நிலையம் எதிரில்,
சென்னை-600 100.

உடனே தொடர்பு கொள்ள :
பாஸ்டர் **அலெக்ஸ் சாம்சன் சாம்,** இயக்குநர்
Cell : 98412 71858 / 98410 71858. E.mail : sam@echoofhiscall.org

**உங்கள் உற்சாகக் காணிக்கைகளை கீழ்க்காணும் வங்கிகள் மூலம் அனுப்பி அதன் விபரத்தை எங்களுக்கு தெரியப்படுத்தவும்:**

| Bank | Branch | Name | IFSC Code No. | Account Number |
|---|---|---|---|---|
| 1. STATE BANK OF INDIA | Triplicane, Chennai -5 | S. Sam Selva Raj | SBIN 0000249 | 102329 34679 |
| 2. ICICI BANK | Anna Salai, Chennai -2 | Echo of His Call | ICIC 0006038 | 6038 05022319 |

Regd. with the Registrar of Newspapers for India under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH © /197/21-23
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS / 1 Patrika Channel"
on 27th FEBRUARY 2021

If un-delivered please return to:
**ECHO OF HIS CALL (TAMIL)**
P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

*JESUS LOVES YOU!*

To

STAMPS

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from 18, Mohammed Abdullah Sahib Street, Chepauk, Chennai-600 005 and printed by him at **Echo of His Call Printers** 18, Mohammed Abdullah Sahib Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**